**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண். 142/2015**

**வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | சேகர் |
| தகப்பனார் பெயர் | : | சின்னமுத்துதேவர் |
| வயது | : | 57 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| மாவட்டம் | : | |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 05.06.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் வடுகபட்டியில் வசித்து வருகிறேன். என்ன பரிகாரம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ராஜேந்திரன், விஜயலெட்சுமி ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்து என்னிடம் தொந்தரவு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.264, பட்டா எண்.762 ஆகும். எவ்வளவு விஸ்தீரணத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 ஏக்கர் 40 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஊர் நத்தம் என்று 20 செண்ட் கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டு வாங்கியுள்ளேன். ஊர் நத்தம் சர்வே எண்.279/1 ஆகும். ஊர் நத்தம் ஆதியில் அப்துல் காதர் அனுபவித்து கொண்டிருந்த அதன் பிறகு அப்துல் கரீம் அனுபவித்து கொண்டிருந்தார். அப்துல் கரீமீடமிருந்து நான் கிரையம் பெற்று 30 ஆண்டு காலமாக அனுபவித்து

வருகிறேன். அப்துல் கரீமிற்கு கொடுத்த பட்டா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தானது தற்போது வரை கிராம நத்தமாக தான் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 279/1 ல் ஆழ்துளைக்கிணறு ஒன்று, முருகன் கோவில், பள்ளிக்கட்டிடம் இரண்டு, சத்துணவு கூடம் ஒன்று, விநாயகர் கோவில், ரேடியோ அறை ஒன்று, தொலைக்காட்சி அறை ஒன்று, கலையரங்கம் ஒன்று, வண்டிபாதை, 2C புளியமரங்கள் ஐந்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிராம நத்தம், அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அதை தவறுதலாக வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் உரிமை கோருவது சட்டப்படி செல்லத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

G ASHOK PRASATH

Digitally signed by G ASHOK PRASATH
Date: 2024.06.13 15:31:20 +0530

**Principal District Munsif**
**Vedasandur**